தலைப்பு 004 - மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 004 - மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மீயுயர் நீதிபதிகளின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மீயுயர் நீதிபதிகளின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம்

நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மீயுயர் நீதிபதிகளின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

(அ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்காய்வு சாட்சிகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆம் தேதியிட்ட நிதி நிலை தொடர்பான அறிக்கையில் காட்டப்பட்டுள்ள ரூபா.580,450,000 பெறுமதியான வாகனங்கள் மற்றும் ரூபா.43,382,190 பெறுமதியான உபகரணங்களின் பெறுமதி எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பதைக் காட்டும் ஆவணம் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்து-வதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.	நிதி நிலை கூற்றில் காண்பிக்-கப்பட்டுள்ள பெறுமதிகள் பொருட்டு உரிய ஆவணங்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருடாந்திர மதிப்பீட்டின்படி, மூலதனச் செலவின விடய இலக்கம் 2001 (கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகள்) பொருட்டு ரூபா.1,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மொத்த நிகர ஒதுக்கீடும் பயன்படுத்தப்படாமல் மிகுதியாக இருந்தது.	வருடாந்தர மதிப்பீட்டின்படி, மூலதனச் செலவின விடயம் 2001 (கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகள்) பொருட்டு ரூபா.1,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த திருத்த வேலைகள் சீன உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அந்த நிதி ஒதுக்கீடுகள் மீதமிருந்தன.	உரிய ஆய்வுடன் செலவின மதிப்பீடு தயாரித்தல் வேண்டும்.
(ஆ)	தேவையான அளவை விட அதிகமாக வருடாந்திர மதிப்பீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதால், மீண்டுவரும் செலவு விடயங்கள் 13 ம், மூலதனச் செலவு விடயங்களுக்காக ரூபா.211,846,439 ஒதுக்கீடும் மீதமிருந்தது. இந்த மீதம் 17 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.	2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிக்கும்-போது, இயன்ற வரை மீதமாகும் தொகை குறைக்கப்படும் வகையில் மதிப்பீடுகளை தயாரிக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	தேவைகளை அடையாளம் காணப்பட்டு செலவினங்களை மதிப்பிடுதல் வேண்டும்.

3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 16 ஆம் தேதியிட்ட இலக்கம் 06/2024 கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 3.3 இன் பிரகாரம், அறிக்கை சமர்ப்பிக்கும் நிறுவனத்தில் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் 2024 திசெம்பர் 31 ஆம் தேதியிட்ட கடப்பாடுகள் இலக்கங்களின்படி வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்குரிய ரூபா.392,178	2024 நவம்பர் 20 ஆம் தேதியிட்ட அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 5/2004 இன் பத்தி 4.8 இன் பிரகாரம், 2025 சனவரி 31 ஆம் தேதிக்கு முன்னர் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த இரசீதுகள் 2025 சனவரி 31 ஆம் தேதிக்குப் பின்னரே கிடைக்கப்	தொடர்புடைய சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	பெறுமதியான 05 பொறுப்புகள், பொறுப்புகள் பதிவேட்டிலும் நிதிநிலை அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிக்கையிலும் உள்ளடக்கப்படவில்லை.	பெற்றதால் அவை கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை.	
(ஆ)	செலவின விடய இலக்கம் 2103 இற்காக 2024 திசெம்பர் 31 ஆம் தேதியன்று மீதமிருந்த ஒதுக்கீட்டுத் தொகை ரூபா.107,255 ஆக காணப்பட்ட போதிலும், 2025 சனவரி 28 ஆம் தேதியன்று, 2024 திசெம்பர் 28 ஆம் தேதியிட்ட இரசீதுக்கு, வவுச்சர் இலக்கம் 26 இன் கீழ் ரூபா.219,999 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஒதுக்கீட்டை மீறி ஏற்பட்டிருந்த பொறுப்புகளின் பெறுமதி ரூபா.112,744 ஆக இருந்தது.	பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்காகப் பெறப்பட்ட இந்த மின்சார அடுப்பானது அதனை கொள்வனவுக்காக கட்டளையிடும் போது தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் செலவின விடயத்தில், போதுமான ஒதுக்கீடுகள் இருந்தன. இருப்பினும், பொருட்கள் கிடைக்கப்பெற்றது 2025 ஆம் ஆண்டில் என்பதால், இந்தக் கட்டணம் செலுத்தப்பட்ட வேளையில், தவறுதலாக இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் என்ற விடயத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒதுக்கீட்டை மீறி கடப்பாடுகள் ஏற்படுத்தப்படவில்லை என்றும் அறியத் தருகிறேன்.	தற்போது காணப்படும் ஒதுக்கீட்டு எல்லையை கவனத்தில் கொண்டு கடப்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே காட்டப்பட்ட விடயம் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதி கட்டுப்பாட்டிற்காக செயல்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணி வரப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தல் வேண்டும் என்பதுடன், மேலும்,	2024 திசெம்பர் 31 ஆம் தேதியிட்ட நிதி நிலை அறிக்கை (ACA – P) இல் இது குறித்து எழுத்துபூர்வமாக ஒரு கூற்றினை காண்பிக்கப்பட்டு, பிரதம கணக்கீட்டு உத்தியோகத்-தரால்	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம்

அந்த முறைமையின் செயல்திறன் குறித்து அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்லத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். அந்த மீளாய்வுகள் எழுத்துபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு, அதன் பிரதி ஒன்று கணக்காய்வு அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	சான்றுப்படுத்தப்பட்டு-ள்ளதுடன், அதனை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	செயற்படுதல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி** ரூபா	**இணங்காமை**		
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் குறிப்பு**				
	(i)நி.பி.கு156 (5)	132,459	ஏதேனும் தவறு திருத்தப்பட வேண்டிய போது, மாற்றப்பட வேண்டிய அல்லது நீக்கப்பட வேண்டிய சொற்கள் மற்றும் இலக்கங்கள் ஆகியவற்றை ஒற்றைக் கோடு ஒன்றினால் வெட்டி நீக்கி, தேவையான இடங்களில் அத்தகைய மாற்றங்களுக்கு மேலே சிவப்பு மையினால் சரியான இலக்கங்களை எழுதுவதன் மூலம் அத்தவறு திருத்தப்பட வேண்டும். அத்தகைய	தற்போது குறைப்பாடுகளை செவ்வாயாக்கி உள்ளதுடன், எதிர்வருங் காலங்களில் நிதி பிரமாணக் குறிப்பு பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர் களிடம் ஆலோசனை வழங்கப்பட்-டுள்ளது.	நிதி பிரமாணக் குறிப்பு பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

		திருத்தங்களுக்கான பொறுப்புடைய உத்தியோகத்தர், தனது குறுங்கையெழுத்திட்டு அத்திருத்தம் மற்றும் வெட்டி நீக்கத்தை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், 05 வவுச்சர்களை திருத்துகையில் நிதி பிரமணாக் குறிப்பு பிரகாரம் செயற்படவில்லை.		
(ii)நி.பி.237(அ)(1)	339,414	உடன்படிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்படும் வேலைகள் அல்லது வழங்கல் பொருட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, உடன்படிக்கை பிரகாரம் திருப்திகரமாக வேலைகள் செய்யப்பட்டுள்ளன என்ற உறுதிப்படுத்தலின் அடிப்படையில் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 09 திருத்த வேலைகளுக்கு அமைய, அந்தக் அலுவலுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து எந்தவொரு உறுதிப்படுத்தலும் பெறப்படாமல் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.	உடன்படிக்கை பிரகாரம் மேற்கொள்கின்ற வேலைகள் அல்லது வழங்கல் பொருட்டு கொடுப்பன வுகளை மேற்கொள்ளும் போது பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரி ன் சான்றிதழ் உறுதிப்ப-டுத்தலை பெற்றுக்கொள்ளு மாறு உத்தியோகத்தர் களுக்கு ஆலோச னை வழங்கப்பட்-டுள்ளது.	வேலைக ளை முடிவுறுத் தப்பட்டது என்பதற்க ான சான்றி தழை பெற்றுக் கொண்டு கொடுப்ப னவுகளை செய்தல் வேண்டும்.
(iii)நி.பி.கு. 104(3)		முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேல் தாமதமானால், ஆரம்ப அறிக்கை உடனடியாக அனுப்பப்படுதல் வேண்டும். மேலும், நிதி பிரமாணக் குறிப்பு 104(4) இன் பிரகாரம், நட்டம் தொடர்பான விசாரணைக்கும் பின்னர் நட்டம் ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் தேதி வரையில் 03 விபத்துகள் ஏற்பட்டு 03	தற்போது இப் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன.	நிதி பிரமாணக் குறிப்பு பிரகாரம் ஆரம்ப விசா-ரணை பணிகள் மேற்கொ ள்ளுதல் வேண்டும்.

		மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தும், அந்த விபத்துகளுக்காக ஆரம்ப விசாரணை நடாத்தப்படவில்லை.		
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 11.1 மற்றும் நிதி பிரமாணம் 756	ஓர் அமைச்சு /திணைக்-களத்திற்கு ஏற்புடையதாக மாகாண அல்லது பிரதேச அலுவலகங்கள் இல்லாவிட்டால், அடுத்த நிதி ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னர் பொருட்களின் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் 2024 திசெம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான பொருட்-களின் கணக்கெடுப்பு அறிக்கையை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கவில்லை.	புதிய கட்டிடத்தின் புனரமைப்பு வேலைகள் 2024 திசெம்பர் மற்றும் 2025 மாதங்களில் மேற்கொள்ளப்பட்டதால், பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகள் தாமதமானது என்பதை அறியத் தருகிறேன். தற்போதைய நிலவரப்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன் அதை உடனடியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்கு விதி பிரகாரம் பொருட் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்-படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சேதங்கள் மற்றும் நட்டஈட்டு பதிவேட்டின்படி ஏற்பட்டிருந்த 05 விபத்துகளுக்காகப் பணம் அறவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி நிலை அறிக்கைகளின் இணைப்பு ii எனக்	சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 05 விபத்துகளில் 02 விபத்துகளுக்கான பணம் எமது நிறுவனத்திற்குக் கிடைத்ததால்,	சேதங்கள் மற்றும் நட்டஈடு தொடர்பாக சரியான அறிக்கைகளை வைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான அறிக்கையில் 02 விபத்துகளுக்காக மட்டுமே அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	சம்பந்தப்பட்ட திருத்த வேலைகளுக்காக பணம் செலுத்தப்பட்டது. எனவே அது அறவீடுகள் நிரலில் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், கணக்குகள் பதிவுசெய்து முடிக்கும் நாள் வரையில், ஏனைய இழப்புகளுக்காக காப்பீட்டு நிறுவனத்தால் பணம் செலுத்தப்பட்டமைக்கான எழுத்துபூர்வ ஆதாரம் பெற முடியவில்லை. ஆனால், இப்போது சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனம் திருத்தங்களை மேற்கொண்ட நிறுவனத்திற்கு நேரடியாகவே கட்டணம் செலுத்தியுள்ளது.	

5. நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 40(1) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் நியமிக்கப்படும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டும். இருப்பினும், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட பதவியணி குழாத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவி உள்ளடக்கப்படவில்லை. அத்துடன், 2019 சனவரி 12 ஆம் தேதியிட்ட இலக்கம் DMA/01-2019 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பந்தி 03 இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ், இலங்கை	இந்தச் செலவின தலைப்பிற்கு அமைய, பதவியணி குழாம் என்பது 37 மீயுயர் நீதிமன்ற நீதியரசர்கள் மட்டுமேயாகும். மேலும், இந்தச் செலவினத் தலைப்பின் கீழ் பொது நிர்வாகச் செலவுகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்காக, இலங்கை கணக்காளர் சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தரை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தராக அதிக செலவில் நியமிப்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என்று அரச கணக்காய்வுப் பிரிவுடனும், முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2023.12.31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கணக்காளர் சேவையின் I ஆம் வகுப்பு உத்தியோகத்தரின் தலைமையில் உள்ள ஓர் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அனைத்து விசேட செலவின அலகுகளுக்காகவும் நிறுவப்படுதல் வேண்டும். ஆயினும், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்படவில்லை.

அறிக்கைகள் தொடர்பாக, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 11 (2) இன் பிரகாரம், வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளின்படி, தலைப்பு 4 இற்காக, 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 40(1) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் நியமிக்கப்படும் அந்த திணைக்களத்துக்கே உரித்தான உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த பதவி இதுவரை உச்ச நீதிமன்ற திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவை தொகுதியாக இப் பதவி இதுவரை இருக்கவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். அதன் காரணமாக இது தொடர்பாக உச்ச நீதிமன்ற திணைக்களத்தின் சேவைப் பிரமாணத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உரிய காலத்தில் அந்தப் பதவி தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் அறியத் தருகிறேன்.